வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 73

07 செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 2023 | தை 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12

# தமிழர்களுக்கென்று தாயகம் இங்கில்லை!

**பேரணியின் பின்னாலிருக்கும் சர்வதேச நாடுகள் எவை?**

**சமஷ்டி என்று ஊளையிடுபவர்களை உள்ளே தூக்கிப்போடவேண்டும்**

**விஷத்தைக் கக்குகின்றனர் தென்னிலங்கை இனவாதிகள்**

யாழ்ப்பாணம், பெப்ரவரி 7

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகம் என்று எந்த அரசமைப்பில் இருக்கின்றது? தமிழர்களுக்கென ஒரு தாயகம் இந்த நாட்டில் இல்லை. தமிழர்களுக்கு தாயகம் வேண்டும் என்று போராடிய விடுதலைப் புலிகள் போரில் ஒழிக்கப்பட்ட பின்னர் என்ன நோக்கத்தோடு வடக்கிலும் கிழக்கிலும் போராட்டம் நடத்தப்படுகின்றது? இந்தப் போராட்டத்தின் பின்னால் உள்ள சர்வதேச நாடுகள் எவை? இவ்வாறு ஆக்ரோஷமாக சிங்களக் கடும்போக்குவாதி நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸவும் சரத்வீரசேகரவும் கேள்வி எழுப்பியுள்ளனர். 11 ➤



## தாயக தேசத்தின் தலைநகரில் கால்பதித்தது எழுச்சிப் பேரணி

திருகோணமலை, பெப். 7

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய அடக்கு முறைக்கு எதிரான எழுச்சிப் பேரணி, தமிழர் தாயக தேசத்தின் தலைநகரான திருகோணமலையில் நேற்றுக் 11 ➤

## லாப்ஸ் எரிவாயு விலையும் உயர்வு

கொழும்பு, பெப். 7

லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் 10 ➤



எவர் என்னசொன்னாலும்

## 13 முழுமையாக நடைமுறையாகும்

*ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்*

யாழ்ப்பாணம், பெப். 7

யார் என்ன சொன்னாலும் எனது பதவிக் காலத்தினுள் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத் 12 ➤



## துருக்கியில் நிலநடுக்கம்; பல்லாயிரம் பேர் பலி!

கொழும்பு, பெப். 7

துருக்கியில் சிரியாவின் எல்லையை ஒட்டிய பகுதியில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். 5 ஆயிரத்துக்கும் 10 ➤

## 13 ஐ தமிழர் எதிர்ப்பது ஏன்? ஆராய்வதற்கு தேரர்கள் வருகை

*யாழ்ப்பாணத்தில் இன்று கலந்துரையாடல்* 12 ➤

## 'துரவு'க்குள்ளிருந்து சடலம் மீட்பு

மதுபோதையில் நடந்த கொலையா?

முல்லைத்தீவு, பெப். 7

முல்லைத்தீவு -உடையார்கட்டுப் பகுதியில் 21 வயது இளைஞன் துரவிலி 12 ➤

நீண்ட விவாதத்தின் பின்பு

## ஆர்னோல்ட்டுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயராக ஆர்னோல்ட் அறிவிக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று 11 ➤

## கூட்டமைப்பிலிருந்து பங்காளிக் கட்சிகளே தமிழரசை வெளியேற்றின

**'உருட்டுகிறார்' சுமந்திரன்**

அம்பாறை, பெப். 7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கை தமிழ் அரசுக் கட்சியை பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டுமே வெளியேற்றின என தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். அம்பாறை மாவட்டத்தின் ஆலை 12 ➤






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போரின்போது வெளியேறியமை ஐ.நா. சபையின் மாபெரும் தவறு

## சாட்சியமற்ற போருக்கு அது காரணமானது

## பான் கீ - மூன் வருகையில் மனோ கடும் தாக்கு



கொழும்பு, பெப். 7

போர் நிகழ்ந்தபோது, வன்னியில் இருந்த ஐ.நா. அலுவலகத்தை இலங்கை அரசு சொன்னமைக்காக மூடிவிட்டு, நாட்டை விட்டு வெளியேறிய அன்றைய ஐ.நாவின் முடிவுக்கு முன்னாள் ஐ.நா. செயலரான பான் கீ – மூன் பொறுப்பேற்க வேண்டும் – இவ்வாறு தெரிவித்தார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

2009ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட அந்தக் கூட்டறிக்கையில் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, தான் தமிழ் கட்சிகளுடன் பேச்சு நடத்தி 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி, அதைமென்மேலும் மேம்படுத்த (13 பிளஸ்) உடன்படுவதாகவும், அதேபோல் சர்வதேச மனித உரிமை நியமங்களை ஏற்று இலங்கையில் கடைப்பிடிப்பதாகவும் உலக மன்றமான ஐ.நாவுக்கு, அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியான பான் கீ - மூன் என்ற தனக்கு உறுதியளித்ததை, இன்றைய அரசாங்கத்தின் பிரதான கட்சியான பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இவர்களின் பின்னால் இன்னமும் நிற்கும் சில பௌத்த பிக்குகளுக்கும் ஞாபகப்படுத்த வேண்டும். இன்று, பொறுப்பை நிறைவேற்றாத தவறைச் செய்து, குற்றவாளிக் கூண்டில் நிற்பது அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மட்டுமல்ல. ஒட்டு மொத்த ஐ.நா. அமைப்பும் என நான் நம்புகிறேன். இவர்கள் அனைவரும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும்.

பான் கீ - மூன் மஹிந்த கூட்டறிக்கையில், கையெழுத்திட்ட ஒரு தரப்பு வார்த்தை தவறுமானால், அடுத்த தரப்பு அதை தட்டிக்கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும், அதன் பெயர்தான் கூட்டறிக்கை. ஆனால், அதை ஐ.நா. செய்யவில்லை. அது மட்டுமல்ல, போர் நிகழ்ந்தபோது, வன்னியில் இருந்த ஐ.நா. அலுவலகத்தை இலங்கை அரசு சொன்னமைக்காக மூடிவிட்டு நாட்டை விட்டு வெளியேறிய அன்றைய ஐ.நாவின் முடிவுக்கு முன்னாள் ஐ.நா. செயலரான பான் கீ - மூன் பொறுப்பேற்க வேண்டும்.

அதனால்தான், இலங்கையின் இறுதிப் போர், சாட்சியமில்லா போராக நிகழ்ந்தது. இன்று போர் முடிந்து ஏறக்குறைய 14 ஆண்டுகள் ஓடுகின்றன. முன்னாள் ஐ.நா. செயலர் இலங்கைப் போர் தொடர்பில் அன்று உலக மாமன்றமான ஐ.நா. சபை விட்ட தவறை இன்றாவது ஏற்றுக் கொள்ளவேண்டும். இன்று அவர் அதிகாரத்தில் இல்லாவிட்டாலும்கூட அவர் அதைப் பற்றிப் பேசவேண்டும். அது உலகளவில் எடுபடும். அன்று இலங்கை போர் தொடர்பாக ஐ.நா. விட்ட தவறு தொடர்பில் அன்றே ஐ.நா. சபைக்குள் ஒரு உள்ளக அறிக்கை தயார் செய்யப்பட்டதை நான் அறிவேன். அதுபற்றி, முன்னாள் ஐ.நா. செயலர் பான் கீ - மூன் இனியாவது பகிரங்கமாகப் பேசவேண்டும் - என்றுள்ளது. (ம)

## நாடாளுமன்றில் 4ஆவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கிறது நாளை

கொழும்பு, பெப். 7

9ஆவது நாடாளுமன்றத்தின் 4ஆவது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு நாளை முற்பகல் நாடாளுமன்ற வளாகத்தில் மிகவும் எளிமையான முறையில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதிக்கு வழமைபோன்று வழங்கப்படும் மரியாதை வேட்டுக்கள் மற்றும் இராணுவ அணிவகுப்பு மரியாதை ஆகியவற்றை நடத்த வேண்டாமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உயர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை ஆரம்பமாகும். அன்றைய நாளில் ஜனாதிபதியின் உரை மாத்திரமே இடம்பெறும்.

ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் யோசனையை முன்வைப்பார் என எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. (ம-44)

## இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் யார்?

### விவரங்களைக் கோரியது தகவலறியும் ஆணைக்குழு

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரட்டைக் குடியுரிமைகொண்டவர்கள் தொடர்பான தகவல்களைத் தருமாறு தகவல் அறியும் ஆணைக்குழு குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரட்டைக் குடியுரிமைகொண்டவர்கள் தொடர்பான தகவல்களைத் தருமாறு தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்திருந்த மேன்முறையீடு கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் குறித்த அதிகாரிகளால் வழங்கப்படும் பதிலுக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அத்துடன் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் நாட்டில் இருப்பது தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், அவர்கள் நாட்டில் தீர்மானம் எடுக்கும் இடங்களில் பதவி வகிப்பது பொருத்தமில்லை. அது எமது நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பாகவும் அமையும். நாட்டில் சட்டம் இயற்றும் நாடாளுமன்றத்தில் இவர்கள் முழுமையான நம்பிக்கையுடன் செயற்படுவார்களா என்ற சந்தேகம் எழுகின்றது - என்றார். (ம)

## ஜனாதிபதி ரணிலின் உரை: நாடாளுமன்றில் விவாதம்!

கொழும்பு, பெப். 7

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் நடைபெறவுள்ளது. சபை ஒத்திவைப்புவேளை விவாதமாக குறித்த விடயம் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக பெப்ரவரி 9 மற்றும் 10ஆம் திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-44)

## கிழக்குத் திமோர் பிரிந்ததுபோல்

# ‘13’ நடைமுறைப்படுத்தினால் இலங்கையும் பிளவடையும்!

## கம்மன்பில கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப். 7

‘13’ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால், இந்தோனேஷியாவிலிருந்து கிழக்குத்திமோர் பிரிந்ததுபோல் இலங்கைக்குள்ளும் பிளவுகள், பிரிவுகள் ஏற்படும் இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.

ஜனவரி 26ஆம் திகதி இடம்பெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக (காணி பொலிஸ் அதிகாரம் உட்பட) நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்னதாக உங்களது ஆலோசனைகளைச் சமர்ப்பியுங்கள் என ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் இதுவரை எந்தக் கட்சியிடமிருந்தும் எந்தவிதப் பதிலும் எழுத்துமூலம் தெரிவிக்கப்படவில்லை. இது தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று அரசியல் பிரதிநிதிகளிடம் கருத்துக்களைக் கேட்டுள்ளது. அதன்போதே கம்மன்பில இவ்வாறு தெரிவித்துள்ளார்.

1998ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி சுகர்ணோ தனது பதவியை இராஜினாமா செய்தார். தொடர்ந்து இடம்பெற்ற தேர்தலில் சேதிவதி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு கிழக்குத் திமோருக்கு சுதந்திரம் வழங்கினார். இந்தோனேஷியாவில் இருந்த சட்ட ஏற்பாடுகள் அதை இலகுபடுத்தின - என்று கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இதுவரை பதவி வகித்த ஏழு ஜனாதிபதிகளும் செய்யாததை (மாகாணசபைக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவதை) ரணில் ஏன் நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார்? என பொதுஜன பெரமுன பேச்சாளர் சாகர காரியவசம் கேள்வியெழுப்பியுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வடக்கிலிருந்து கிழக்குக்கு நகரும் மக்கள் பேரெழுச்சி

## மூன்றாம் நாள்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் சுதந்திரதினத்தைக் கரிநாளாக அறிவித்து முன்னெடுக்கப்பட்ட 'வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணி' மூன்றாம் நாளான நேற்று முல்லைத்தீவு - பண்டாரவன்னியன் சிலையிலிருந்து ஆரம்பமானது. அங்கிருந்து அலம்பில் சந்தியைச் சென்றடைந்து, அங்கிருந்து குருந்தூர்மலைப் பகுதியைச் சென்றடைந்தது.


அங்கிருந்து திட்டமிட்டவாறு தென்னைமரவாடி ஊடாக திருகோணமலையைச் சென்றடைந்தது.

(ம-125)









# குருந்தூர்மலை ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் நேற்று போராட்டம்

முல்லைத்தீவு, பெப். 7

வடக்கிலிருந்து - கிழக்குநோக்கி முன்னெடுக்கப்படும் கரிநாள் பேரணியின் மூன்றான் நாள் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக குருந்தூர்மலைப் பகுதியில் பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழர்களின் தொன்மையான வாழ்விடமான குருந்தூர் மலையில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும். தொல்பொருள் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டுள்ள நிலப்பகுதிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோஷங்களை எழுப்பியவாறு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல்தரவை இன்மையால் விவசாயச் செய்கைகள் பாதிப்பு

### மன்னார் விவசாயிகள் சுட்டிக்காட்டு

மன்னார், பெப். 7

மன்னாரில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை இல்லாததால் விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கால்நடைகளுக்கு ஏற்ற மேய்ச்சல்தரவைகளை உருவாக்கிக் கொடுக்காத பட்சத்தில் விவசாயிகளும், பண்ணையாளர் களும் இனிவரும் காலங்களிலும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட விவசாய அமைப்புக்களைச் சேர்ந்தோர் தெரிவித்ததாவது:-

நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பல கிராமங்களிலும் முருங்கன் குளத்தின் கீழ் உள்ள ஒலுமடு பகுதியிலும் உள்ள விவசாய நிலங்கள் கால்நடைகள் மேய்ச்சல் தரவைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் விவசாயச் செய்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் கால்நடைகளுக்கான உரிய மேய்ச்சல் நிலத்தை ஒதுக்கிக் கொடுக்காததால் விவசாயிகளுக்கும், கால்நடை உரிமையாளர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றியுள்ளன. கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவைகள் இல்லாவிட்டால் பண்ணையாளர்களும் எங்கு செல்வர். உண்மையில் இந்த விடயத்தில் இரு தரப்பினரும் பாதிக்கப்படுகின்றனர். எனவே துறைசார் அதிகாரிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்து மேய்ச்சல் தரவைகளை உருவாக்கவேண்டும் - என்றனர். (ம-14,213)



# இலங்கைக்கு மேலும் 50 பேருந்து இந்திய அரசாங்கம் நன்கொடை!

கொழும்பு, பெப். 7

இலங்கையின் கிராமப்புறங்களில் பொதுப்போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்த இந்திய அரசாங்கம் 500 பேருந்துகளை வழங்கத் திட்டமிட்டுள்ள நிலையில், அவற்றில் 50 பேருந்துகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டன.

இதற்கான ஆவணங்களை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே கையளித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன இந்திய அரசிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, 75 ஆவது தேசிய சுதந்திரதின நிகழ்வுகளின் ஓர் அம்சமாக இந்த பேருந்துகள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இலங்கைக்கு இதுவரை 165 பேருந்துகளை இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14,22)

# முல்லைத்தீவுக் குளங்களின் வான் கதவுகள் மூடப்பட்டன

முல்லைத்தீவு, பெப். 7

தொடர் மழை காரணமாக முல்லைத்தீவில் சில குளங்களில் வான்கதவுகள் திறக்கப்பட்டிருந்த நிலையில், விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக வான் கதவுகள் மூடப்பட்டுள்ளன.

முத்தையன்கட்டுக்குளம், தண்ணிமுறிப்புக்குளம் ஆகிய இரு குளங்களின் வான் கதவுகளே மூடப்பட்டுள்ளன. தொடர் மழை காரணமாக முத்தையன்கட்டுக் குளத்தின் நான்கு வான் கதவுகளும் தண்ணிமுறிப்புக் குளத்தின் மூன்று வான் கதவுகளும் திறந்து விடப்பட்ட நிலையில் அந்தக் குளங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வயல்நிலங்கள் வெள்ளக்காடாக மாறின.

இதையடுத்து விவசாயிகளின் வேண்டுகோளின் அடிப்படையில் குளங்களின் வான் கதவுகள் மூடப்பட்டுள்ளன. (ம-14,13)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை.

**இடபம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விடயமாக சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவுமிருக்காது.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கணவன் – மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**துலாம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். சகோதர வகையில் மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருப்பினும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**மகரம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம்.

**கும்பம்:** தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சகோதர வகையில் எதிர்பாராத செலவு ஏற்படும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை.

**மீனம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

### போயா தினத்தில்

# யாழ்.பொலிஸார் குருதிக்கொடை!

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணம் ஆரியகுளம் ஸ்ரீநாகவிகாரையில் போயா தினமாகிய கடந்த சனிக்கிழமை பொலிஸாரால் குருதிக் கொடை வழங்கப்பட்டது.

ஆரியகுளம் ஸ்ரீ நாகவிகாரையின் விகாரதிபதி சிறி விமல தேரரின் ஏற்பாட்டில் இந்தக் குருதிக்கொடை நிகழ்வு இடம் பெற்றது. யாழ்.போதனா மருத்துவமனையில் குருதித்தட்டுப்பாடு நிலவுவதாக வெளியான செய்தியை அடுத்து இந்த குருதிக்கொடைமுகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு குருதிக் கொடையளித்தனர். (ச-26)

# பல்கலை வெற்றிடங்கள் 15 க்கு முன் நிரப்பப்படும்

### பல்கலை மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

2023 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக வெற்றிடங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

உயர்தரப் பரீட்சை மீள் பரிசீலனை முடிவுகளின் பின் பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். மருத்துவ பீடங்கள் உட்பட பல பீடங்களின் புதிய கல்வியாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலுமுள்ள வெற்றிடங்களும் பூர்த்தி யாக்கப்படும் - என்றார். (ச-இ)

# பாத யாத்திரை

கொடிகாமம், பெப். 7

மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதியில் இருந்து திருக்கேதீச்சரம் நோக்கிய திருத்தல பாத யாத்திரை எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (ய-159)

# போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப். 7

வலுவிழந்தோர் மறுவாழ்வுச் சங்கத்தின் 33 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு சிறப்புத் தேவையுடையோரின் திறன்களை வெளிக்கொணரும் முகமாக போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கழுத உறை ஒட்டுதல், தையல், மாலை கட்டுதல், கோலம் போடுதல், கதிரை பின்னுதல், சித்திரம் வரைதல் உள்ளிட்ட போட்டிகளும், கட்டுரை, கவிதை, பாட்டு, பேச்சு, நாடகம், நடனம் உள்ளிட்ட போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

இதற்கெனயாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடையோரிடமிருந்து மறுவாழ்வுச் சங்கத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பங்களை அலுவலகத்தில்பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பான் கீ - மூனும் பதின்மூன்றும்

இலங்கை அரசாங்கம் தெரிவித்தது என்பதற்காக, வன்னியில் இருந்த ஐக்கிய நாடுகள்சபையின் அலுவலகத்தை அவசரஅவசரமாக மூடிவிட்டு நாட்டைவிட்டு வெளியேறியமை ஐக்கிய நாடுகள்சபை மேற்கொண்ட வரலாற்றுத் தவறு. இந்த வரலாற்றுத் தவறுதான் 'சர்வதேச சாட்சியங்களின்றி' 2009ஆம் ஆண்டு இறுதிப்போர் நடந்துமுடியக் காரணமாகியது – என்று 'தனக்கே உரித்தான பாணியில்' வெளிப்படையாகவும் நேர்த்தியாகவும் விமர்சித்திருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

மலையக மக்களை அடையாளப்படுத்தும் ஒரு பிரதிநிதியாக – அரசியல்தலைவராக அவர் இருக்கின்ற போதிலும், ஈழத்தமிழர்களின் நீதிக்கான பயணத்தில் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதில் 'ஒரு தமிழ்த் தலைவராக' மனோ கணேசன் பின்னின்றதில்லை. அரசமைப்பின் 13ஆவது திருத்தம், அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் இந்திய நலன்சார் சிந்தனைகளை அவர் வெளிப்படுத்திய – வெளிப்படுத்துகின்ற போதிலும், பொதுமைப்பாடான நோக்கின் அடிப்படையில் அவருடைய கருத்துக்கள் காலத்தேவை கருதியனவாகவும் மெச்சத்தக்கதாகவும் தான் அமைந்திருக்கின்றன.

இனப்படுகொலை இடம்பெற்றதாகச் சொல்லப்படும் இறுதிப்போர்க் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலராக இருந்தவர் பான் கீ – மூன். அவர் தற்போது இலங்கையில் முகாமிட்டிருக்கின்றார். இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தம் எந்த மாற்றமுமின்றி – திருத்தங்களின்றி 'உள்ளது உள்ளபடியாக' நிறைவேற்றப்படவேண்டுமென்ற கோரிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது வலுத்திருக்கின்றது. இப்படியானதொரு பின்னணியிலேயே, தருணம்பார்த்து 'கோல்' அடித்திருக்கின்றார் மனோ கணேசன்.


இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13ஆவது திருத்தத்தை இந்தியா கொண்டுவந்திருந்த போதிலும், அதை இப்போதும் இந்தியா – இலங்கை இடையிலான விவகாரமாகக் கொள்ளுதல் தகாது. பிராந்திய நலன்களுக்கும் அப்பாற்பட்டு சர்வதேச விவகாரமாக 13ஆவது திருத்தம் மாற்றம்பெற்று நெடுநாள்கள். இன்னும் சொல்லப்போனால், விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த பின்னர், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தம் தொடர்பில் இலங்கைக்கு சர்வதேச அழுத்தமொன்றைக் கொடுத்த முதலாமவர் பான் கீ – மூன்தான். 2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பான்கீ– மூன், 13ஆவது திருத்தத்துக்கும் அப்பாற்பட்டு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார். அதை அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவும் ஏற்றிருந்தார். '13 பிளஸ்' என்று ஆரம்பித்த சொல்லாடல்களுக்கான உயிர்ச்சாட்சிகளில் ஒருவர் பான் கீ– மூன்.

2009களில் '13 பிளஸ்' என்றிருந்த தீர்வுப்பொதி இன்று '13 மைனஸ்' என்பதாக மாறியிருக்கின்றது. 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர்வதற்கு இடமளியோம் என்று பெரமுனவுக்குள்ளும் பேரினவாதக் கட்சிகளிலும் ஏற்பட்டுள்ள எதிர்ப்பலை இன்று நன்றாகவே எடுபடுகின்றது. நாள்கள் இன்னுமின்னும் உருண்டோடினால், 13ஆவது திருத்தம் உச்சக்கட்ட அதிகாரக்குறைப்புக்களுடன்தான் நடைமுறையாகும் சாத்தியங்கள் தென்பட ஆரம்பித்திருக்கின்றன. 13ஆவது திருத்தமே தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை எனும்போது, அதிலுள்ள அதிகாரங்களைக் கூட பிடுங்கியெடுத்துவிட்டு அதன்பின்னர் தீர்வாக அதைத் திணிப்பதென்பது எவ்வாறு தமிழர்களைத் தலைநிமிர வைக்கும். 13 தொடர்பான ஒப்பந்தம் வெறுமனே இந்திய – இலங்கை ஒப்பந்தமல்ல. அது இலங்கை – ஐ.நா. ஒப்பந்தமும்தான். இறுதிப்போரின்போதும் அதன் பின்னரும் பல வரலாற்றுத் தவறுகளூடாக, தமிழினம் வஞ்சிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்த ஐ.நா. இனியாவது கொஞ்சம் விழித்துக்கொள்ளட்டும்.

நாளொரு நல்வார்த்தை

"அதிகாரத்தை வெல்வது அன்பு. பயத்தை வெல்வது துணிவு"

– டெஸ்கார்ட்டெஸ்



# தேர்தல் செலவை நினைத்தே அச்சப்படுகிறது அரசாங்கம்!

## நிதி இராஜாங்க அமைச்சர் சியம்பலாப்பிட்டிய சூசகம்!



கொழும்பு, பெப். 7

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நினைத்து அஞ்சவில்லை, தேர்தல் செலவுகளை நினைத்தே அச்சமடைகின்றோம் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் யோசனை அரசாங்கத்துக்குக் கிடையாது. தேர்தலை நினைத்து அஞ்சவில்லை. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் சிவில் பிரஜை ஒருவர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுவில் நிதியமைச்சின் செயலாளர் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ளார். நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் நிதியமைச்சின் செயலாளர் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடும் வகையில் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையை கொண்டுவர தீர்மானித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றதாகும். தேர்தலைக் கண்டு அஞ்சவேண்டிய தேவை எமக்கு இல்லை, இருப்பினும் தேர்தல் செலவுகளைக் கண்டு அச்சமடைகிறோம். நாணயம் அச்சிடுவதற்கு மட்டுப்பாடுகள் காணப்படுகின்ற நிலையில் அரச செலவுகள் இயலுமான அளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில் தேர்தலுக்காக நிதி அச்சிட்டால் பணவீக்கம் மீண்டும் உயர்வடைந்து பொருளாதார பாதிப்பு மேலும் தீவிரமடையும். அரச செலவுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் சகல அரச நிறுவனங்களுக்கும் விசேட சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. அமைச்சுகளின் செலவுகளைக் குறைப்பதற்கும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. செலவுகளை மட்டுப்படுத்த அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகள் தற்போது வெற்றியடையடைந்துள்ளன. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது. சிறந்த முகாமைத்துவத்தால் எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றுக்கான வரிசையுகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு அனைத்துத் தீர்மானங்களும் முன்னெடுக்கப்படவேண்டும்.

நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் தெரிந்திருந்தும் இதைவைத்து எதிர்க்கட்சிகள் முன்னெடுக்கும் அரசியல் உண்மையில் வெறுக்கத்தக்கது என்பதுடன் அர்த்தமற்றதுமாகும் - என்றார். (ம-இ)

நாளை 08.02.2023 புதன்கிழமை தை 25


சுபநேரம் : 05.05 – 06.35

ராகுகாலம் : 12.35 – 02.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படங்கள்: ஐ.சிவசாந்தன்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயிலில் தைப் பூச நிகழ்வுகள் பக்திபூர்வமாக நடைபெற்றன. (ய)




வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தைப்பூச திருமஞ்ச உற்சவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. (ய-27)





சாவகச்சேரி - சங்கத்தானை நாமகள் முன்பள்ளிச் சிறுவர்கள் மற்றும் பெற்றோருக்கான போஷாக்கு, பாரம்பரிய உணவுமுறை மற்றும் தொற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு தென்மராட்சி பிரதேச ஆயுள்வேத அபிவிருத்திப் பிரிவால் அண்மையில் முன்பள்ளி மண்டபத்தில் முன்னெடுக்கப் பட்டது. (ம-9)



தைப்பூச நாளை முன்னிட்டு வரணி கலாசார மத்திய நிலையத்தில் மாணவர்களுக்கான சித்திரம், சங்கீதம், நடனம், மிருதங்கம் உள்ளிட்ட கலைவகுப்புக்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பிக்கப்பட்டன. (ய-159)



தைப்பூச நன்னாளில் சாவகச்சேரி நகர் அருள்மிகு புராதன தான்தோன்றி வாரிவனநாதர் சுவாமி சமேத அமிர்த பாக்ஷினி அம்பாள் உடனுறை சிவன் ஆலயத்தில் (வாரிவனேஸ்வரம் பழைய சிவன் கோவில்) ஏடு தொடக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-159)




பேராசிரியர் மாரிமுத்து சின்னத்தம்பியின் பவள விழா" நிகழ்வு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கல்வியியலாளர்கள், பல்துறை சார்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-66)



சாவகச்சேரி விகோரியார் ஆலய வளாகத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தென்மராட்சி அலகினரால் மரநடுகைச் செயற்றிட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. பிரதேச செயலர், ஆலய பங்குத்தந்தை மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் பங்கேற்று மரக்கன்றுகளை நடுகை செய்தனர். (ச-9)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஆசிரிய பயலுநர்களுக்கு பூமாலை கட்டுவது தொடர்பான பயிலரங்கு, கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதான மண்டபத்தில் கலாசாலை அதிபர் ச.லி[illegible]ன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ம-14-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி - துன்னாலையில் மாடுகள் திருட்டு அதிகரிப்பு

### முறையிட்டும் பயனில்லை

யாழ்ப்பாணம், பெப். 7

வடமராட்சி - துன்னாலைப் பகுதியில் மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கடும் அதிருப்தியையும் கவலையையும் வெளியிட்டுள்ளனர்.

கடந்த வாரம் மட்டும் 5 மாடுகள் திருடப்பட்டன. கடந்த வருடம் 50க்கும் மேற்பட்ட மாடுகள் திருடப்பட்டன.

இது தொடர்பாக பல தடவைகள் பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தும் பயன் கிடைக்கவில்லை.

மாடுகள் திருடப்படுவதால் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகவுள்ளது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ம-14-20)



முழங்காவில் பகுதியில்

## மேய்ச்சல் தரவை இன்றி பண்ணையாளர்கள் அவதி

கிளிநொச்சி, பெப். 7

முழங்காவில் குளத்தின் மேற்பகுதியில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமையால், தமது கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவைகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது என்று முழங்காவில் பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

முழங்காவில் பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ளபோதிலும் மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக கால்நடை உரிமையாளர்கள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். முன்பு முழங்காவில் குளத்தின் மேற்பகுதியில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்தக் கூடிய நிலைமை இருந்தது.

தற்போது குளத்தின் மேற்பகுதியில் பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனாலே கால்நடைகளை குளத்தின் மேற்பகுதியில் மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியாமல் உள்ளது. பூநகரியை பொறுத்தவரையில் மேய்ச்சல் தரவைகளுக்கான நிலங்கள் இனங்காணப்படவில்லை.

பூநகரி கால்நடை வளர்ப்பாளர்கள் நீண்டதூரம் கால்நடைகளைக் கொண்டு சென்று சுன்னாவில்குளம், ஜெயபுரம் வடக்கின் திக்குவில்குளம் ஆகிய குளப்பகுதிகளில் மேய்ச்சலில் ஈடுபடுத்துகின்றனர். எனவே பூநகரி பிரதேசத்தில் நிலவும் மேய்ச்சல் தரவை பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் - என்றனர். (ம-14-13)

## சுற்றுலா சென்ற மூவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

கொழும்பு, பெப். 7

சுற்றுலா சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சிலாபம் முகத்துவாரத்தில் நீராடச் சென்ற நிலையில் நீரில் மூழ்கி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் 7 வயது மகள், 6 வயது மகன் மற்றும் 35 வயதுடைய தந்தை ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

சிலாபம் முகத்துவாரத்துக்கு படகில் சென்ற மூவரும் படகில் இருந்து இறங்கி நீராடச் சென்ற நிலையில் நீரில் மூழ்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-14-22)


**கார்/வான் குத்தகைக்கு தேவை**

கார்கள், வான்கள் சாரதி இல்லாமல் மாதாந்த குத்தகைக்குத் தேவை.

**077 83 95 849**

**Home Visist English Medium Classes**

English Lang, Singhalaese, Geo, Civics, History, Accounting

Any Grade - 077 331 6402

(CS 23332) (4/6)

**வேலையாட்கள் தேவை**

யாழ்.இந்து அருகில் உள்ள அச்சகத்திற்கு

- கணனி ரைப் செற்றிங் தெரிந்தவர்கள் (Corel DRAW, Photoshop)
- மெசின் மைண்டர் (Kod)
- புத்தகம் கட்டுனர்

அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

பகுதிநேரம் வேலை செய்ய விரும்புவர்கள் தொடர்பு கொள்ளவும்.

075 150 6234, 077 250 6234

**பெயர்மாற்றம்**

கேணியடி, கரணவாய் மேற்கு கரவெட்டியில் வசிக்கும் **சிவகுரு உதயராணி** ஆகிய எனது பெயரினை இன்று முதல் **சிவகுரு உதயராசா** என மாற்றிக் கொள்வதோடு இன்று முதல் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

சிவகுரு உதயராசா

**பெயர் மாற்றம்**

இல.17/3 சிவபுரம், மன்னார் றோட், வவுனியா எனும் முகவரியில் வசிக்கும் **பாலகிருஸ்னன் ப்ரீனி** ஆகிய எனது பெயரை இன்று முதல் **பாலகிருஸ்னன் தர்சினி** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **பாலகிருஸ்னன் தர்சினி** என்றே கையொப்பமிட்டுப் பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

பாலகிருஸ்னன் தர்சினி

**பெயர் மாற்றம்**

நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறையில் வசிக்கும் **வின்சென்ற் சார்லஸ் யொஸ்சி** ஆகிய நான் எனது பெயரை **வின்சென்ற் சார்லஸ் பெய்சி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **வின்சென்ற் சார்லஸ் பெய்சி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன். (CS 23335) (3/6)

வின்சென்ற்சார்லஸ் பெய்சி


## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## பகிரங்க ஏல அறிவித்தல்

சபைக்கு சொந்தமான மலைவேம்பு -1 , வேம்பு -2 , பூவரசு -1, இப்பிலிப்பி -1 என்பன பகிரங்க ஏலத்தில் விடப்பட உள்ளது.

| | |
|---|---|
| காலம் | : 2023.02.15 (புதன் கிழமை) |
| நேரம் | : மு.ப 10.00 |
| இடம் | : தலைமை அலுவலகம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை. (காங்கேசன்துறை பட்டின சபை) |

ஆர்வமுடைய கேள்விதாரர்கள் மீளளிக்கக்கூடிய ரூ.1000.00 தொகையினை தலைமை அலுவலகம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, கொல்லங்கலட்டியில் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். சித்தி பெறும் கேள்வி தாரர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் செலுத்தி மரங்களை அப்புறப் படுத்தல் வேண்டும். குறித்த ஏலத்திற்கு விடப்படும் மரங்களை சபையின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். மேலதிக தகவல்களுக்கு 0212241130

சோமசுந்தரம் சுகிர்தன்,
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

07.02.2023
(CR 39206)(3/6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

கேதீஸ்வரன் துஷ்யந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**ரிஷிகேசன்**


யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் **160** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

அவரை வாழ்த்துவதோடு மென்மேலும் வெற்றிகள் பெற நல்லாசிகளை வழங்குகிறோம்.

வாழ்த்துவோர்:-
காந்தன் பெரியப்பா,
பெரியம்மா
சானு அக்கா,
கவி அண்ணா
கட்டப்பிராய்.

(CS 23330)(3/6)

## நினைவழியாப் பெருந்துயரில் 3ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னைமடியில் 21.08.1944 — ஆண்டவன் அடியில் 11.02.2020

## அமரர் வேலாயுதர் காசிநாதர்

(ஓய்வுபெற்ற வயோதிபர் இல்ல பணியாளர்)

திதி : துதியை

ஆண்டு மூன்று அகன்றோடி மறைந்தாலும்
உங்கள் நினைவு என்றும் மறக்காது
அன்பான குடும்பத்தின் ஒளிவிளக்கே
உழைப்பை உரமாக்கி
பாசமாய் பணிவிடைகள் பல செய்து
வாழ்க்கை எனும் பாடத்தை
எமக்கு கற்றுத் தந்த
எமது உயிர் தந்தையே....
காலங்கள் மாறலாம், காட்சிகள் மாறலாம்,
நீங்கள் எம்மேல் வைத்த பாசம் தான் மாறுமோ,
கண்ணீரை நிறுத்த முடியாமல் தவிக்கின்றோம் - தெய்வமே
சிரமம் தெரியாமல் வளர்த்தீர்கள்
துயரம் அணுகாமல் காத்தீர்கள்!
விருப்பறிந்து வாழ வைத்தீர்கள்
உமையிழந்து தவிக்கவும் விட்டீர்கள்!
தடுமாறி நிலைகுலைந்து தனித்து நிற்கின்றோம்...
நட்புக்காய் உழைத்தவர் நீங்கள்
உறவுக்காய் தேய்ந்தவர் நீங்கள்
உழைப்பின் மறுவடிவம் நீங்கள்
விருந்தோம்பலின் இருப்பிடம் நீங்கள்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஈஸ்வரி பவனம்,
கைதடி கிழக்கு,
கைதடி.

என்றும் பிரிந்தும் பிரியாத
நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 23320)(3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 04 . 1939



இறப்பு 06 . 02 . 2023

### திருமதி மங்கையற்கரசி சிவஞானம்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்போது கோப்பாயை இருப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி சிவஞானம் நேற்று (06.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லம்மா - தம்பிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை - இராமலிங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிவஞானத்தின் (ஜெயா ஆட் போட்டோ, சாவகச்சேரி) அன்பு மனைவியும், கலைவாணி (நோர்வே), சிவதுர்க்கா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராஜா, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், லீலாவதி, மாணிக்கவாசகர் ஆகியோரின் சகோதரியும், துளசி, பாலகுமார், கௌரி, ரவீந்திரன், தர்சினி ஆகியோரின் சிறிய தாயும், வேணிலா, சாலினி, அஹஸ்பதன், பபிஷனா, விசாகன், டினுசா, அபிராமி, யுகேதன், தாரனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருமகன் - 077 923 1488
மகள் - 077 830 1976

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23342) 1-6

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 09.12.1944

இறப்பு 07.02.2020

அமரர்

### கதிர்காமக்குருக்கள் மாணிக்கவாசகர்

அப்பா! நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து ஆண்டுகள் மூன்று
கடந்தாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

பாசமுடன்....
குடும்பத்தினர்.

(CR/39202) 4-6

## மரண அறிவித்தல்



தோற்றம் 15.07.1948

மறைவு 05.02.2023

### சோமசுந்தரம் நாகம்மா

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நாகம்மா அவர்கள் 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற விநாசித்தம்பி கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கேதீஸ்வரன், ஆனந்தகௌரி, ஜெகதீஸ்வரன், பிரகதீஸ்வரன், மனோகௌரி, அமிர்தகௌரி, ஜெயகௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகலட்சுமி, சாந்தலிங்கம், பொன்னம்மா (மங்கை), கேதீஸ்வரி (கோமதி), அருள்முருகன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வமலர், காலஞ்சென்ற நீதிராஜா, சகாயநாயகி, வதனா, ரூபகாந்தன், யோகமோகன், சுதாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2023) புதன்கிழமை 87/5, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று திருவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**

**மகன் : சோ. கேதீஸ்வரன்**
(ஈகிள் ஹாட்வெயார் - யாழ்ப்பாணம்)
**மகன் சோ. ஜெகதீஸ்வரன்**
(சிற்றி ரான்ஸ்போட் - கொழும்பு)
**மகன் : சோ. பிரகதீஸ்வரன்**
(சிற்றி ஹாட்வெயார் & ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்)

(CS 48961) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லாத சுதந்திரத்துக்காக எதற்கு ரூ.200 மில். செலவு?

## சரத் பொன்சேகா கேள்வி



கொழும்பு, பெப். 7

நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியில் மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கின்றனரா? நாடு பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் சுதந்திரதின நிகழ்வுகளுக்காக அரசாங்கம் 200 மில்லியன் ரூபாவை ஏன் செலவிட்டது? –இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா.

பாணந்துறையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொதுமக்கள் தமது அன்றாட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். அவ்வாறிருக்கையில் சுதந்திரதின நிகழ்வுகளுக்காக அரசாங்கம் 200 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியில் மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கின்றனரா?

இந்த நிதியை நாடளாவிய ரீதியில் மருந்துத் தட்டுப்பாடு நிலவும் மருத்துவமனைகளுக்கு மருந்து கொள்வனவுக்காகப் பயன்படுத்தி இருக்கலாம். நாட்டு மக்கள் துன்பத்தை அனுபவித்து வரும் நிலையிலும் முன்னர் இருந்த ஆட்சியாளர்கள்போல இன்று ஆட்சியில் உள்ளவர்கள் சுகபோகமான வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டு குதூகலமாக இருக்கிறார்கள். தற்பொழுது உள்ள ஆட்சியாளர்களிடம் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் எந்தவொரு முறையான நோக்கங்களும் திட்டங்களும் கிடையாது.

எதிர்காலம் தொடர்பில் நீண்டதொரு குறிக்கோள்களும் கிடையாது. ஆனால், அவர்கள் அன்றும் இன்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தற்காலிகமாகத் தீர்வு பெற்றுக்கொடுக்கும் செயல் முறையிலேயே ஈடுபட்டுள்ளார்கள் - என்றார். (ம-14,இ)




## பொலிஸார் தொடர்பான அதிகாரங்கள் எவரிடம்?

கொழும்பு, பெப். 7

பொலிஸ் உயரதிகாரிகளை இடமாற்றம் செய்யும், தண்டனை வழங்கும், நியமனம் செய்யும் அதிகாரம் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பகுதி இணையதளத்திலிருந்து நீக்கப்பட்டுள்ள விடயம் அம்பலமாகியுள்ளது.

இந்த அதிகாரங்கள் முன்பு பொலிஸ்மா அதிபரிடமே இருந்தது. பின்னர் இந்த அதிகாரங்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தது. 21 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் புதிய ஆணைக்குழு ஜனவரி 20 ஆம் திகதி முதல் செயற்படத்தொடங்கும் என்று ஜனவரி 13 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரமாகியிருந்தது. எனினும் அன்றைய தினமே வர்த்தமானி காணாமற் போயிருந்தது. இது பொலிஸ்மா அதிபரும் ஏனைய பொலிஸ் உயரதிகாரிகளும் அதிகாரங்களை தாமே வைத்திருப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கையா? என சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-14,6)

## எமது பதவிதொடர்பில் விவாதிக்க காஞ்சனவுக்கு அதிகாரம் இல்லை

### ஜனக ரத்நாயக்க பளார் கருத்து

கொழும்பு, பெப். 7

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உறுப்பினர்களின் நியமனம் மற்றும் பதவிவிலகல் தொடர்பில் விவாதிக்க மின்சக்தி அமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்று ஆணைக்குழுத் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுபவர்கள், பொதுப்பயன்பாடுகள் சட்டம் மற்றும் மின்சாரசபைச் சட்டத்தைப் படித்து தெரிந்து கொள்ளவேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர்களான பிரதித் தலைவர் உதேனி விக்கிரமசிங்க மற்றும் மொஹான் சமரநாயக்க ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை ஆணைக்குழுவிலிருந்து விலகினர். பின்னர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை டக்ளஸ் என்.நாணயக்கார ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

ஆணைக்குழுத் தலைவரின் தன்னிச்சையான நடவடிக்கை மற்றும் தொழில் ரீதியற்ற தன்மை காரணமாகவே குழுவின் உறுப்பினர்கள் பதவி விலகியதாக இலங்கை மின்சாரசபை கூறியுள்ளது. ஆணைக்குழு உறுப்பினர்கள் பொதுவாக ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரைகளின் அடிப்படையில் நியமிக்கப்படுவர். ஆணைக்குழு உறுப்பினர்களின் நியமனம் மற்றும் பதவிவிலகல் குறித்து பொறுப்பான அமைச்சர் முடிவெடுக்க வேண்டும். எனினும் மின்சக்தி அமைச்சருக்கு இந்த விவகாரம் குறித்து விவாதிக்க அதிகாரம் இல்லை. ஏனெனில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அவரது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனம் அல்ல. எனவே, அவர் தமது சொந்த வேலையைப் பார்த்துக்கொண்டு அமைதியாக இருக்க வேண்டும் – என்றார். (ம-14,இ)

## 200 மில்லியன் டொலர் கடனை செப்ரெம்பர் இலங்கை செலுத்தும்

### பங்களாதேஷ் நம்பிக்கை

கொழும்பு, பெப். 7

பங்களாதேஷிடம் இருந்து கடனாகப் பெற்ற 200 மில்லியன் டொலரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் இலங்கை திருப்பிச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஏ.கே.அப்துல் மோமன் தெரிவித்தார்.

இலங்கை படிப்படியாக முன்னேறி வருகிறது. இந்தநிலையில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு செப்ரெம்பர் மாதம் வரையில் இலங்கைக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது - எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட இந்த 200 மில்லியன் டொலர் கடனை கடந்த மார்ச் மாதம் இலங்கை திருப்பிச் செலுத்தியிருக்கவேண்டும். எனினும், இலங்கை மேலும் கால அவகாசம் கோரியதை அடுத்தே பங்களாதேஷ் இலங்கைக்கு மேலும் ஆறு மாதகால அவகாசம் வழங்கியிருந்தது. (ம)

## நாட்டின் நிதி நெருக்கடியைக் கடுமையாக முகாமை செய்கிறதாம் நிதிஅமைச்சு!

கொழும்பு, பெப். 7

நாட்டில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, நாட்டுக்குத் தேவையான பணத்தை, நிதி அமைச்சு மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் முகாமைசெய்து வருகின்றது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுமக்களின் செலவினங்களுக்குத் தேவையான பணத்தை வழங்குவதற்கு நிதி அமைச்சின் அதிகாரிகள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். ஏனைய அனைத்து அமைச்சுக்களின் செலவுகளை நிர்வகிப்பதுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மூலம் செலவுகளை நிர்வகிப்பது தொடர்பாக சிலதரப்பினர் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு பல்வேறு அழுத்தங்களை வழங்கி வருகின்றனர் - என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வெற்றிக்கான வேலைத்திட்டம் தயார்

## பெரமுனவின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 7
தேர்தலில் வெற்றிக்குத் தேவையான வேலைத்திட்டங்களை பெரமுன முன்னெடுத்து வருகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தலைவர். இல்லாததால் கட்சிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் வேலைத்திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. வாக்குப்பெட்டிகள் எண்ணப்படும் போது யார் வெற்றி பெற்றுள்ளனர் என்பதை அறியமுடியும்.
இதேவேளை- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட குழுவினர் தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்ட ஆலோசனை பெறப்பட்டு வருகின்றது - என்றார். (ம-14-இ)

# கோடீஸ்வரர் ஒருவர் சடலமாக மீட்பு!

கொழும்பு, பெப். 7
இலங்கையைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவர் இந்தோனேஷியாவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
ஓபெக்ஸ் ஹோல்டிங்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் அவர் தங்கியிருந்த தொடர்மாடியிலிருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. உயிரிழப்பு தொடர்பான விசாரணைகளை இந்தோனேஷியப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-14-இ)

### லாப்ஸ்...

அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 12.5 கிலோ எரிவாயு சிலிண்டர் 200 ரூபாவால் அதிகரித்து 5 ஆயிரத்து 280 ரூபாவாகவும், 5 கிலோ சிலிண்டர் 80 ரூபாவால் அதிகரித்து 2 ஆயிரத்து 112 ரூபாவாகவும், 2 கிலோ சிலிண்டர் 32 ரூபாவால் அதிகரித்து 845 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.
லிட்ரோ எரிவாயு விலை நேற்றுமுன்தினம் முதல் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### துருக்கியில்...

அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இதன்போது அங்குள்ள இலங்கையர்களில் ஒருவர் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என துருக்கியிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் 9 இலங்கையர்கள் இருப்பதாகவும் அவர்களில் 8 பேரை இதுவரையில் தொடர்பு கொண்டுள்ளதாகவும் துருக்கிக்கான இலங்கைத் தூதுவர் திருமதி ஹசந்தி உருகொடவத்த தெரிவித்துள்ளார்.
இந்த 9 பேரில் ஒருவர் இடிந்து விழுந்த கட்டடத்தில் வசித்து வந்திருந்ததாகவும், ஆனால், நில நடுக்கம் ஏற்பட்ட போது அவர் அங்கு இருக்கவில்லை எனவும் துருக்கிக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார். நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எதிர்பாராத வகையில் அதிகமாக உள்ளதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார். (அ-ஒ.இ)


# மரண அறிவித்தல்

## வைரவப்பிள்ளை ஞானச்சந்திரன்

(ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலை காவலாளி)



மாவிட்டபுரம் வீணியவரையை (வாளித் தொழிற்சாலை ஒழுங்கை) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவப்பிள்ளை ஞானச்சந்திரன் நேற்று (06.02.2023) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற வைரவப்பிள்ளை மற்றும் சரஸ்வதி தம்பதியரின் ஏகப்புதல்வனும், சந்திரகலாவின் அன்புச் சகோதரனும், சண்முகநாதனின் அன்பு மைத்துனரும் சுகந்தன், சகிலா, பவதாரணி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02. 2023) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையற்கரசி சுந்தரலிங்கம்



தோற்றம் 10.08.1929 — மறைவு 05.02.2023

திருமதி மங்கையற்கரசி சுந்தரலிங்கம் கடந்த (05.02. 2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான S.R. கந்தையா ஜீவநாயகி தம்பதியரின் அருமை மகளும், சிவகுரு சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், மீனதர்ஷினி, மகிதலக்ஷ்னி, மஞ்சுளதக்ஷ்னி, காலஞ்சென்ற மயூரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சிவலோகநாதன், விக்னேஸ்வரன், யோகசிவம், அம்புஜவல்லி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவலேக்கா, தர்ஷன், ஜெகதீஸ்வரன், தாரணி, பைரவி, ஜெயமயூரி, ஜெயகௌரி ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், யோகாம்பாள், சிவபாக்கியம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 1.30 மணியளவில் பூதவுடல் வில்லூண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்தத் தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

174,
முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
மீனா - 077 520 6071
விக்னேஸ் - 076 471 9907

(CS23345)1-6


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செலவின வரம்பை மீறும்
# வேட்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை!

கொழும்பு, பெப். 7

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்காளர் ஒருவருக்கான நிர்ண யிக்கப்பட்ட செலவின வரம்பை மீறும் வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

எவ்வளவு தொகை செலவிட வேண்டும் என்பது குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக வும் மேலதிகமாக அனைத்து அரசியல் கட்சிகளின் சுயேச்சைக் குழுக் களுக்கும் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் செலவினம் ஒழுங்குபடுத்தல் தொடர்பான சட்டவரைவு ஜன வரி 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பி டத்தக்கது. (அ-ஒ-இ)

## ரணிலின் உரை மீதான
# விவாதத்தை எதிர்க்கட்சி புறக்கணிப்பு

கொழும்பு, பெப். 7

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள் கைப் பிரகடன உரை மீதான இரு நாள் விவாதத்தை புறக்கணிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மா னித்துள்ளதாக, அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

'நாளையும் நாளை மறுதினமும் ஜனாதிபதியின் உரை மீதான விவாதத்தில் எமது கட்சி வெறு மனே பார்வையாளர்களாக மட்டுமே இருக் கும்' எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-6)

### தமிழர்களுக்கென்று...

ஆக்கிரமிப்புக்களை நிறுத்து என்ற கோஷத்துடன் வடக்கிலிருந்து கிழக்கை நோக்கிய பேரணி முன்னெடுக்கப்படு கின்றது. இது தொடர்பில் கருத்து வெளி யிட்டபோதே அவர்கள் இருவரும் மேற் கண்டவாறு தெரிவித்தனர்.

'தனிநாட்டைக் கோரும் புலிப் பயங்கர வாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்த படையினரை அவமதிக்கும் வகையி லும் கோஷங்களை எழுப்பியவாறு வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிப் புறப் படும் தமிழர் பேரணிக்கு அனுமதி வழங் கியது யார்? நாடு இருக்கும் தற்போ தைய நிலைமையில் இப்படியான பேரணி ஒன்று தேவையா? இந்த விட யத்தில் பாதுகாப்பு அமைச்சு மௌனம் காத்தது ஏன்? வடக்கு- கிழக்கு மாகா ணங்கள் தமிழர்களின் தாயகம் என்று எந்த அரசமைப்பில் இருக்கின்றது? தமிழர்களுக்கென ஒரு தாயகம் இந்த நாட்டில் இல்லை. இது ஒற்றையாட்சிக் கட்டமைப்பைக்கொண்ட நாடு. எனவே, இந்த நாட்டை எந்தச் சந்தர்ப்பத்திலும் பிளவுபடுத்த முடியாது. சமஷ்டி வேண் டும் என்று ஊளையிடுபவர்களைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்' - என்றார் சரத் வீரசேகர.

'இந்தப் பேரணிக்கு புலம்பெயர்நாடு களில் இருந்து நிதியுதவிகளை வழங்கு பவர்கள் யார்? அன்றாட கருமங்களில் இருக்கும் மக்களை வலுக்கட்டாயமாக வீதிக்கு அழைத்து வந்தவர்கள் யார்? என்பது தொடர்பில் அரச புலனாய் வுத்துறையினர் உடனடியாக விசார ணைகளை மேற்கொள்ளவேண்டும். இப்படியான போராட்டங்களும் பேரணி களும் நாட்டை வன்முறைக்களமாக்கி மீண்டும் இருண்ட யுகத்துக்கே கொண்டு செல்லும். இந்த விடயம் தொடர்பில் அரசாங்கமும் அதிகாரத்தில் இருப்பவர் களும் அதிக கவனம் எடுக்கவேண்டும்'- என்றார் விமல் வீரவன்ஸ. (அ-ஒ.5-22)

### ஆர்னோல்ட்டுக்கு...

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டு நீண்ட விவாதங்களின் பின்னர் எதிர்வரும் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகரசபை மேயராக இ.ஆர்னோல்ட் தெரிவு செய் யப்பட்ட முறைமைக்கு எதிராக இடைக் கால நிவாரணம் கோரி மாநகர பை உறுப்பினர் வ.பார்த்தீபனால் யாழ்ப்பா ணம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக் கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக் கில் 49 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பி டப்பட்டிருந்தனர்.

மாநகரசபை மற்றும் மாநகர ஆணை யாளர் தரப்பில் சட்டத்தரணி சசிரேகா வும் மாநகர மேயர் உட்பட 23 உறுப்பி னர்கள் சார்பில் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் முன்னிலை யாகினர். இதேநேரம் வழக்காளி மற் றும் மேலும் 10 மாநகரசபை உறுப்பி னர்கள் சார்பில் சட்டத்தரணிகளான கு.குருபரன், வி.மணிவண்ணன், வி.திருக்குமரன் உட்பட 5 பேர் முன்னி லையாகினர்.

மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் பிர காரம் மேயரின் வரவு -செலவுத் திட்டம் இரு தடவைகள் தோல்வியடைந்ததன் பின்னர் பதவியேற்கும் மேயர் தானாகப் பதவி விலகினால் சபை கலைக்கப்பட வேண்டுமே தவிர புதிய மேயர் தெரி வுக்கு இடமில்லை. அதேவேளை இரண்டு தடவைகள் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து தோல்விய டைந்து பதவியிழந்த மேயர் மீண்டும் போட்டியிட முடியாது. சபையில் போதிய நிறைவெண் (கோரம்) இல்லை என்று ஒத்திவைக்கப்பட்ட பின்னர் மேயர் தெரிவு செய்யப்பட்டதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டமை செல் லுபடியற்றது என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. மாநகர மேயர் ஆர்னோல்ட் உட்பட 23 உறுப்பினர்கள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தனது வாதத்தில், வழக்கு தொடுநரின் (வ.பார்த்தீபன்) சத்தியக்கூற்றே தவறா னது. சத்தியக்கூற்றை முடித்தவர் கூட் டத்துக்கே சென்றிருக்கவில்லை. கூட் டத்துக்கே போகாமல் இப்படியெல்லாம் கூட்டத்தில் நடந்தது என எப்படி அவர் சொல்வார்? தான் கூட்டத்துக்கு போக வில்லை என்பதை கூட சத்தியக்கடதாசி யில் முடிக்க முதுகெலும்பில்லாத ஆள் மனுதாரர். மிகப்பொய்யான சத்தியக் கூற்றை முடித்துள்ளார். அன்றைய கூட்டத்தில் 24 பேர் இருந்ததாகச் சொல் லியுள்ளார்கள். ஆனால், 33 பேர் கையெழுத்திட்டுள்ளனர். அதன் பிரதி உள்ளது. 33 பேர் கூட்டத்துக்கு வந்தார் கள் என்பதைச் சொல்லாமல் 24 பேர் இருக்கிறார்கள் எனப் பொய் சொல்லி யுள்ளனர்.

கூட்டத்தின் வரவுப் பதிவேட்டில் 33 உறுப்பினர்கள் ஒப்பமிட்டதோடு ஒத்தி வைக்கப்பட்ட பின்பு தேர்வு செய்யப்பட் டதான வர்த்தமானி அறிவித்தல் வெளி யிட்டமையில் அன்றைய சபையில் ஒரேயொரு தெரிவு மட்டுமே இருந்ததே யன்றி வேறு தெரிவுகள் இருக்க வில்லை என்று சுட்டிக்காட்டினார்.

மேலும், இரண்டு தடவைகள் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்து தோல் வியடைந்தவர் மீண்டும் மேயர் தெரி வில் போட்டியிட முடியாது என்பது 2012ஆம் ஆண்டு வந்த சட்டம் என் றால், 2020ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம்பெற்ற மேயர் தெரிவின் போதும் இதே ஆர்னோல்ட்தான் போட் டியிட்டார். அப்போது அதனை ஏன் எதிர்க்கவில்லை ?என்ற வாதத்தையும் அவர் முன்வைத்தார்.

மனுதாரரான யாழ். மாநகரசபை உறுப் பினர் வ.பார்த்தீபன் சார்பில் சட்டத்த ரணி வி.திருக்குமரன் சமர்ப்பணம் செய்யும் போது, ஒருவர் கூட்டத்தை ஒத்திவைக்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்று, இவர்தான் மேயர் என்று அறி வித்துள்ளார்.

கூட்டத்தை ஒத்திவைப்பதென்பதன் அர்த்தம், அன்றைய கூட்டத்தின் எந்தத் தீர்மானமும் செல்லுபடியாகாது என் பதே. பிறகெப்படி மேயர் தெரிவு இடம் பெற்றது? என்று கேள்வியெழுப்பி னார். முன்னாள் முதல்வர் வி.மணி வண்ணன் சார்பில் அவரே முன்னிலை யாகியிருந்தார். அவரது சமர்ப்பணத் தின் போது, 33 பேர் கையெழுத்திட்டதா கச் சொல்கிறார்கள். அந்த 33 பேர் கையெழுத்திட்டதை ஒரு சத்தியக்கடதா சியாகவே இந்த நீதிமன்றத்துக்கு கொண்டு வர முடியும். அன்றைய கூட் டத்திலிருந்த யாராவது ஒருவர், 33 பேர் கூட்டத்தில் இருந்தனர் என சத்தியக் கூற்றை முன்வைக்க வேண்டும். ஆனால் அந்த சத்தியக்கூற்றை முன் வைக்கக்கூட, அந்த 23 பேரில் ஒருவ ருக்கு கூட வக்குமில்லை, முதுகெலும்பு மில்லை. ஏனெனில் அப்படியொரு சத்தியக்கூற்றை முடிக்க முடியாது. அந்த சபையில் 33 பேர் இருக்க வில்லை. கையெழுத்து வைத்து விட்டு சென்று விட்டனர். நான் 31 ஆம் திகதி பதவிவிலகினேன். 14 நாள்களுக்குள் முதல்வர் தெரிவு நடந்திருக்க வேண் டும். ஆனால் 19ஆம் திகதியே முதல்வர் தெரிவு நடந்தது. இதுவே விதி மீறல். இந்த மீறலுக்கு காரணம், அந்த காலப் பகுதியில் இழுபறி இருந்தது. முதல்வ ரைத் தெரிவு செய்யலாமா?, செய்ய முடியாதா? என்ற குழப்பமிருந்தது. உள்ளூராட்சி ஆணையாளருக்கு கூட சந்தேகம் இருந்தது. சட்டவிரோத முதல் வருக்கு இடைக்கால தடைவிதிக்காமல் விட்டால், இந்த காலப்பகுதியில் நடக் கும் தவறான முகாமைத்துவத்திற்கு நாங்கள் தான் பொறுப்புச் சொல்ல வேண்டும் - என்றார்.

அப்போது நீதிபதி குறுக்கிட்டு, 'முதல்வ ருக்கு இடைக்காலத் தடைவிதித்தால் சபை நடவடிக்கை குழம்பாதா?' என கேட்டார். மணிவண்ணன் பதிலளிக்கை யில், இடைக்கால தடைவிதிக்காவிட் டால் தான் சபை நடவடிக்கை குழம்பும். நான் பதவிவிலகிய பின்னர், புதிய முதல்வர் தெரிவாகும் வரை சபை ஒழுங்காகவே இயங்கியது. பிரதிமேயர், ஆணையாளரின் தலைமையில் ஒழுங் காக நடந்தது. இடைக்காலத் தடைவிதிக் காவிட்டால் தான் குழம்பும். தவறான முகாமைத்துவம், வரவு - செலவு திட்டம் என்பன சட்டவிரோதமாகும், அந்தக் காலப்பகுதியில் நடந்தவற்றுக்கு பொறுப்புக் கூற வேண்டியிருக்கும்- என்றார். இதேவேளை மாகாண உள் ளூராட்சி ஆணையாளர் மற்றும் செய லர், மாகாண ஆளுநர் சார்பில் மன் றில் முன்னிலையான அரச சட்டவாதி விதுரன், வழக்கு தொடர்பான ஆவ ணங்கள் சில நாள்களுக்கு முன்னரே தனக்கு கிடைத்ததாகவும், ஆவணங்க ளைப் படிக்க கால அவகாசம் தேவை யெனவும் கோரினார். இதையடுத்து, வழக்கை பெப்ரவரி 13ஆம் திகதிக்கு தவணையிட்டு யாழ்ப்பாண மேல் நீதி மன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் உத்தரவிட்டார். (அ-ஒ.5)

### தாயக....

கால்பதித்து. கிழக்கு சிவில் அமைப்புக் கள், பல்கலைக்கழக மாணவர்கள் பேரெழுச்சியுடன் பேரணியை வரவேற் றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திலிருந்து கடந்த 4ஆம் திகதி புறப்பட்ட பேரணி நேற்றுமுன்தினம் முல்லைத் தீவில் இரண்டாம் நாள் பயணத்தை நிறைவு செய்தது. முல்லைத்தீவு பண் டாரவன்னியன் சிலையிலிருந்து நேற் றைய மூன்றாம் நாள் பேரணி ஆரம்ப மாகி முல்லைத்தீவு - அளம்பில் சந்தி யைச் சென்றடைந்தது. குருந்தூர் மலையை ஆக்கிரமித்து பௌத்தமய மாக்கலுக்கு அத்திபாரமிடும் அனைத்து நடவடிக்கைகளையும் எதிர்த்து போராட் டம் நடத்தப்பட்டது. தொடர்ந்து அளம் பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் வீரச் சாவைத் தழுவிய உறவுகளை நினைவு கூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது டன் ஈகச்சுடரும் ஏற்றப்பட்டது.

அங்கிருந்து பௌத்த ஆக்கிரமிப்புக் குள்ளாகியுள்ள நீராவியடிப் பிள்ளை யார் ஆலயத்தைச் சென்றடைந்தது பேரணி. அங்கும் போராட்டம் நடத்தப் பட்டது, அதன் பின்னர் தென்னைமரவா டியூடாகச் சென்ற பேரணியை கிழக்கு மாகாணத்தின் எல்லையில் திரியாய் சந்தியில் வைத்து சிவில் சமூகத்தினர் கிழக்குப் பல்கலைக்கழக திருகோண மலை வளாக மாணவர்கள் வரவேற்ற னர். அங்கிருந்து புல்மோட்டையைச் சென்றடைந்து பின்னர் கிண்ணியா ஊடாக திருகோணமலை நகரை பேரணி சென்றடைந்தது. பேரணியினர் அங்கு போராட்டத்தையும் நடத்தினர். அங்கிருந்து வாடிவீடு சிவன்கோயிலை பேரணி சென்றடைந்தது. அங்கு போராட்டத்தின் நோக்கம் தொடர்பில் தெளிவுபடுத்தும் கூட்டம் நடத்தப்பட்டது. அங்கிருந்து ஆலங்கேணி ஊடாக குமாரபுரம் படுகொலை நினைவி டத்தைச் சென்றடைந்தது. அங்கு அஞ்சலி செலுத்திய பின்னர் வெருக லைச் சென்றடைந்து மூன்றாம் நாள் பேரணி நிறைவுற்றது. இன்று இறுதி நாள் பேரணி திருகோணமலையிலி ருந்து புறப்பட்டு மட்டக்களப்பை சென்ற டையவுள்ளது. (அ-ஒ.125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 முழுமையாக....

தப்படும். அதில் சந்தேகம் வேண்டாம் -என கொழும்பு செய்தியாளர் ஒருவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வ கட்சி கூட்டத்தில் தெரிவித்திருந்தார். இதற்கு தென்னிலங்கை கடும்போக்கு வாதிகள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். இறுதியாக மகாநாயக்க தேரர்களும் கண்டனம் வெளியிட்டதுடன், முன்னைய ஜனாதிபதிகள்கூட அதனைச் செய்யவில்லை எனச் சுட்டிக்காட்டியிருந்தனர். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியிருந்ததுடன், நேரில் சந்தித்த ஜனாதிபதி ரணிலிடமும் அதனைத் தெரியப்படுத்தியிருந்தனர். இதன்பின்னரான சுதந்திர நாள் உரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் எதுவுமே தெரிவித்திருக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையில், 13 தொடர்பில் அவரின் தற்போதைய நிலைப்பாட்டை வினவியபோது,

13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். எனது பதவிக் காலத்தினுள் செய்து முடிப்பேன். அது தொடர்பில் குழம்பவேண்டியதில்லை என்று பதிலளித்தார். (அ-ஒ-5-22)

## 13ஐ தமிழர்....

யாழ்ப்பாணம், பெப். 7

தமிழ் மக்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏன் எதிர்க்கின்றார்கள் என்பது தொடர்பில் ஆராய்வதற்காக மல்வத்த, அமரபுர மற்றும் சியம் பீடங்களைச் சேர்ந்த 20 பௌத்த தேரர்கள் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்துள்ளனர்.

அமரபுர பிரதம தேரர் மாதம்பாவே அஸ்ஸஜி தலைமையில் வந்துள்ள இந்தக் குழுவினர் இன்று சர்வமதத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். இன்று காலை 9 மணிக்கு கரித்தாஸ் நிறுவனத்தில் சர்வமத தலைவர்களுடனும், 4 மணிக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனும் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளனர்.

தமிழ் மக்கள் 13ஆம் திருத்தத்தை எதிர்ப்பதற்கான காரணம் என்ன என்றும் அதில் உள்ள குறைபாடுகள் என்ன என்றும் புத்திஜீவிகள் மதத்தலைவர்களிடம் கலந்துரையாடி விளக்கத்தைப் பெற்று 13ஐ எதிர்க்கும் சிங்களமக்களிடையே அதை தெளிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டே இந்த வருகை அமைந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-7)

## ...ட்டமைப்பிலிருந்து...

...வேம்பு பிரதேச சபைக்கான தேர்த... தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்...டும் வேட்பாளர்களை அறிமுகம் ...ய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ...லை பிரதேச கலாசார மண்டபத்... நடைபெற்றது. இந்த நிகழ்வில் உ...ரையாற்றுகையிலேயே சுமந்திரன் ...ற்கண்டவாறு தெரிவித்தார்.

...வர் மேலும் தெரிவித்ததாவது:-

...லங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களிக்கும் மக்கள் மத்தியில் தேவையில்லாத சில குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒற்றுமையாக இருந்த நீங்கள் (இலங்கை தமிழ் அரசுக் கட்சி) அதைச் சிதறடித்துவிட்டீர்கள் என்று எங்கள் மீது பலர் குற்றம் சுமத்துகின்றார்கள். ஒற்றுமையைக் குலைத்தவர்கள் நாங்கள் அல்ல. இந்தத் தேர்தலில் எப்படி போட்டியிடுவது என்பது குறித்து நாங்கள் சில பரிந்துரைகளை முன்வைத்தோம். எங்களுடைய பரிந்துரைகள் சிலருக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. நீங்கள் சொல்கின்ற முறையிலேயே தேர்தலைச் சந்திப்போம் என்று அவர்கள் கூறிய முடிவையும் ஏற்றுக்கொண்டோம். அதுகூட அவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. நீங்கள் தனியே போங்கள், நாங்கள் எங்களைப் பார்த்துக்கொள்கின்றோம் என்றார்கள்- இவ்வாறு சுமந்திரன் கூறியுள்ளார்.

இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும் தீர்மானம் அந்தக் கட்சியின் மத்திய குழுவிலே எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## துரவுக்குள்ளிருந்து....

ருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான். சம்பவம் தொடர்பில் 4 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சம்பவம் தொடர்பில் மாறுபட்ட தகவல்களை விசாரணையில் தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்த இளைஞன் உட்பட 5 பேர் மது அருந்தியுள்ளனர். இதன்போதே இளைஞனை இழுத்துச் சென்று துரவில் தள்ளி விழுத்தியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. 5 பேர் ஒன்றாக மது அருந்தியதாகவும், திடீரென இளைஞன் ஒருவன் தன்னை விடுமாறு கூக்குரலிடும் சத்தம் கேட்டதாகவும் அயலவர்கள் விசாரணையின்போது குறிப்பிட்டுள்ளனர். (ஒ.5-125)


### குத்தகைக்கு தேவை

வான்கள், கார்கள் குத்தகைக்கு தேவை.
தகுந்த கூலி வழங்கப்படும்.
077 489 1279

### காணி விற்பனைக்கு

பிரதான வீதி, தெல்லிப்பளையில் 8 பரப்புக் காணி முழுமையாக அல்லது பகுதியாக பிரித்து வழங்கப்படும். இரண்டு பக்கம் பாதை உள்ளது. (கடை, மண்டபம், விருந்தினர் விடுதி அமைப்பதற்கு சிறந்த இடம்)
T.P: 075 077 4745

### விடுதி உதவியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் விடுதிக்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய உதவியாளர் தேவை.
077 736 0353

### பணியாட்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளர், சிட்டை எழுதுனர், கணினி இயக்குனர் பணிகளிற்கு பெண் பணியாளர் தேவை. (வயது 18 - 35) தகுதி க.பொ.த சாதாரணதரம், உயர்தரம் போதுமானது விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். (CR 39186)(3/5)
075 881 0010, 021 221 5777


# மரண அறிவித்தல்

பிறப்பு 23 - 07 - 2003



இறப்பு 05 - 02 - 2023

## ஜோசப் அனோஜன்

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜோசப் அனோஜன் அவர்கள் நேற்று முன்தினம் (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் ஜோசப்(சுகாதார பாதுகாவலர்)-கௌசல்யா தம்பதியினரின் செல்வப்புதல்வனும்,டர்ஷிகா(பேராதனை பல்கலைக்கழக 3ம் வருட மாணவி), சனுஜன்(லண்டன்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 582/56, செபஸ்ரியன் லேன், ஒட்டுமடம், யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று (07.02.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**582/56, செபஸ்ரியன் லேன்**
**ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 05 - 1944



மறைவு 06 - 02 - 2023

## வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்

குரும்பசிட்டி றோட், கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம் நேற்று (06.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னபூரணம் அவர்களின் பாசமிகு கணவரும், அமிர்தராஜ் (காந்தன் - சுவிஸ்), அருள்ராஜ் (றூபன் - ராஜ் பிரதர்ஸ் எலக்ரோனிக்ஸ்), அன்புராஜ் (உதயன் - ராஜ் பிரதர்ஸ் எலக்ரோனிக்ஸ்), அமிர்தரஜனி (பிள்ளை - அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழிற்துறை திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி (சுமதி - சுவிஸ்), சியாமளா (ராணி), அகல்யா, சுதர்சன் (சுதா- அபிவிருத்தி உத்தியோகத்தர், வடமாகாண திறைசேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அபிஷன் (சுவிஸ்), அபீலயா (சுவிஸ்), அபிஷா (சுவிஸ்), அபிலாஷ், ஆகாஷ், அஜீசன், அஸ்வின், அதிசயா, அரீஷ், அன்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2023) முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலட்டி வீதி,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**
**0777 32 46 48**

(CS/48964)4,6

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ...பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.